பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir


மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 14 வியாழக்கிழமை 30.09.2021 கதிர் 193

## தொடரும் கைது வேட்டை; நேற்று 290 பேர் சிக்கினர்

இலங்கையில் தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று 290 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் 12 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் இன்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2

## ஊரடங்கு தளர்ந்தாலும் மாகாணங்களுக்கிடையில் தடை!



நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும், மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடு அவ்வாறே தொடரும்.

-இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கடந்த ஒகஸ்ட் 21 ஆம் திகதி முதல் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நாளை ஒக்ரோபர் முதலாம் திகதி அதிகாலை 4 மணியுடன் தளர்த்தப்படவுள்ளது.

எனினும், கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் இன்னும் நாட்டில் இருந்து முற்றாக நீங்காத காரணத்தால், சில கட்டுப்பாடுகளைத் தொடர்வதற்குக் கொரோனாத் தடுப்புச் செயலணி தீர்மானித்துள்ளது. 2

### லொஹானின் அராஜகச் செயற்பாடுகளுக்கு எதிராக

# எட்டு தமிழ் அரசியல் கைதிகள் அடிப்படை உரிமை மீறல் மனு



## உயர்நீதிமன்றத்தில் இன்று தாக்கல்

**அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் ஆயுதமுனையில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மேற்கொண்ட அராஜகச் செயற்பாடுகளுக்கு எதிராக தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.** 2

## ஒரு மாதக் குழந்தை திடீர் உயிரிழப்பு; தாய்க்குக் கொரோனாத் தொற்று!

### பருத்தித்துறையில் துயரம்

யாழ்., பருத்தித்துறையில் தாயாருக்குக் கொரோனோத் தொற்று உறுதியாகியுள்ள நிலையில் அவரது ஒரு மாதக் குழந்தை திடீரென உயிரிழந்துள்ளது.

தாய்க்கு கடந்த 22ஆம் திகதி கொரோனாத் தொற்று உறுதியான நிலையில் அவர் சிகிச்சை பெற்று வருகின்றார். 2

## மேற்கு முனைய அபிவிருத்தி ஒப்பந்தம் அதானி குழுமத்துடன் இன்று கைச்சாத்து

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்தி தொடர்பில் இந்தியாவின் அதானி குழுமத்துடன் ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

துறைமுக அதிகார சபை சார்பில் அதன் தலைவரும், அதானி நிறுவனத்தின் பிரதிநிதிகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்தியாவின் அதானி நிறுவனத்தின் உள்நாட்டு முகவர் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையுடன் ஒன்றினைந்து இந்தியாவின் அதானி குழுமம் நிர்மாணித்தல், செயற்படுத்தல், பரிமாற்றல் என்ற அடிப்படையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. 2

## வடக்கில் நாளை முதல் மாவட்டங்களுக்கிடையில் வழமையான நேர அட்டவணையில் பஸ் சேவைகள்



(இ.கலையமுதன்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பஸ் சேவைகள் நாளை அதிகாலை தொடக்கம் வழமையான நேர அட்டவணையில் இடம்பெறும் என்று பிராந்திய பிரதான முகாமையாளர் செல்லத்துரை குலபாலச் செல்வன் தெரிவித்தார். 2

## வவுனியாவில் மேலும் மூவர் தொற்றால் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 41 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், மூவர் மரணமடைந்துள்ளனர் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தி 2

## கையொப்பமிடமாட்டேன்!

### -கம்மன்பில திட்டவட்டம்



யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தில் 40 வீதத்தை வழங்குவதன்றி, இலங்கைக்கு ஐந்து வருடத்துக்குளிவாயுவிநியோகிக்கும் சர்வாதிகாரத்தை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்குவதே பிரச்சினைக்குரியது. நாட்டுக்குப் பாதகமான எந்தவொரு 2

## ராஜபக்ஷ குடும்பத்தினரைச் சந்திக்க வருகின்றார் சுப்பிரமணியம் சுவாமி!

### புதுடில்லியில் மிலிந்த மொரகொடவுடனான பேச்சின் பின் அவர் 'டுவிட்'



நான் விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு எனது அருமை நண்பர் ராஜபக்ஷ குடும்பத்தைச் சந்திக்கவுள்ளேன் என்று பா.ஜ.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் மிலிந்த மொரகொட, சுப்பிரமணியம் சுவாமியை புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுகளை நடத்தியுள்ளார்.

இதனை சுப்பிரமணியம் சுவாமி தனது டுவிட்டரில் 2

## கையொப்பமிடமாட்டேன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்படிக்கையிலும் வலுசக்தி அமைச்சர் என்ற வகையில் நான் கையொப்பமிடப்போவதில்லை.

-இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நியூ போட்ரஸ் வலு நிறுவனம் 2023ஆம் ஆண்டு முதல் 2028 ஆம் ஆண்டு வரை ஐந்து வருடங்களுக்கே எரிவாயு விநியோக நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

இந்த வருட இறுதியில் ஏலம் நடத்தப் பட்டால் அதிலிருந்து மூன்று வருடங் களில் எமது நாட்டில் எரிவாயு உற்பத் தியை ஆரம்பிக்க முடியும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

உற்பத்தியை ஆரம்பிக்க முடியும். எனினும், எமது மின்சார உற்பத்தி நிலையத்துக்கு 2028 ஆம் ஆண்டு வரைஅமெரிக்கநிறுவனம்எரிவாயுவை வழங்குமானால் இலங்கையில் எரி வாயுவை அகழ்வதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைப்பதற்கு அது தடையாக அமையலாம்.

அது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வலு சக்தி அமைச்சுக்கு அதனால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் நாம் எழுத்து மூலம் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளோம்.

யுகதனவி மின் உற்பத்தி நிலையத் தின் 40 வீதத்தை வழங்குவதன்றி, இலங்கைக்கு ஐந்து வருடங்களுக்கு எரிவாயு விநியோகிக்கும் சர்வாதி காரத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதே பிரச்சினைக்குரியது.

அத்துடன் டென்டர் செயற்பாடுகள் நடைமுறையில் உள்ள நிலையில் எரி வாயு விடயம் தொடர்பில் அனுபவம் உள்ளவர்கள் எமது அமைச்சிலேயே உள்ளனர். எனினும், உடன்படிக்கை மேற்கொள்ளும் எந்தக் குழுவிலும் எமது அமைச்சின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவில்லை.

அனுபவம் உள்ளவர்கள் எமது அமைச்சில்உள்ளநிலையில்அதுதொடர் பில் அமைச்சரவைக்கு 2 மதிப்பீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. மற்று மொரு மதிப்பீடும் பெற்றுக்கொடுக்க எதிர் பார்க்கப்பட்டுள்ளது. எனினும், எரிவாயு உடன்படிக்கை எந்தளவு காலம் பேசப்பட்டது என எனக்குத் தெரியாது.

எவ்வாறெனினும் எமது நாட்டுக்குப் பாதிப்பான எந்தவொரு உடன்படிக்கை யிலும் நான் கையொப்பமிடமாட்டேன் -என்றார்.

## எட்டு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனின் ஏற்பாட்டில் சட்டத்தரணி மோகன் பாலேந்திரா ஊடாக இந்த அடிப்படை உரிமை மீறல் மனு இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பூபாலசிங்கம் சூரியபாலன், மதியர சன் சுலக்சன், கணேசன் தர்ஷன், கந்தப்பு கஜேந்திரன், இராஜதுரை திருவருள், கணேசமூர்த்தி சிதுர்ஷன், மெய்யமுத்து சுதாகரன், ரி.கந்தரூபன் ஆகிய தமிழ் அரசியல் கைதிகளே அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இதில் எதிர் மனுதாரர்களாக இரா ஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அநுராதபுரம் சிறைச்சாலை அத்தி யட்சகர் எம்.எச்.ஆர்.அஜித், சிறைச் சாலை ஆணையாளர் நாயகம் எச்.எம். ரி.என். உபுல்தெனிய, நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

மேற்படி மனுவை நாளை அல்லது எதிர்வரும் திங்கட்கிழமை அல்லது செவ் வாய்க்கிழமை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத் தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் மனு தாரர்கள் சார்பில் ஆஜராகவுள்ளனர்.

## ஒருமாத.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் வீட்டிலிருந்த அவரது குழந்தை உயிரிழந்த நிலையில் நேற்று வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட் டது.

குழந்தையின் சடலம் மீது மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை யில் குழந்தைக்குத் தொற்று கண்ட றியப்படவில்லை. இந்நிலையில், பிரேத பரிசோதனையை சட்ட வைத்திய அதி காரி இன்று மேற்கொள்ளவுள்ளார்.

## மேற்கு முனைய.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'வெஸ்ட்கன்டெய்னர்இன்டர்நெஷனல் டேர்மினல்' என்ற பெயரில் புதிய கூட்டு நிறுவனத்தினால் கொழும்பு துறைமுகத் தின் மேற்கு முனைய அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 51 சதவீத பங்குகள் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கும், 34 சதவீத பங்குகள் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் நிறுவனத்துக்கும்,15 சதவீத பங்குகள் துறைமுக அதிகார சபைக்கும் வழங்கப் பட்டுள்ளன.

## ராஜபக்ஷ.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவிட்டுள்ளார்.

நாங்கள் காத்திரமான நட்பு ரீதியிலான பேச்சுகளை மேற்கொண்டோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நான் விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு எனது அருமை நண்பர் ராஜபக்ஷ குடும்பத்தைச் சந்திக் கவுள்ளேன். அனைத்து விவரங்களும் இறுதியானதும் டுவிட்டரில் அது தொடர்பில் தகவல்களை வெளியிடுவேன் எனவும் சுப்பிரமணியம் சுவாமி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தொடரும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், இதுவரை தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 79 ஆயிரத்து 537ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 பிரதேசங்களில் நேற்று மேற்கொள்ளப் பட்ட சோதனை நடவடிக்கையில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 152 வாகனங்களில் பயணித்த 286 பேர் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலை மையகம் குறிப்பிட்டுள்ளது.

## வடக்கில் நாளை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி வடபிராந்தியத்தில் 5 மாவட் டங்களுக்கு இடையேயும் பஸ் சேவை கள் முன்னைய நேர அட்டவணையில் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பயணிகள் அனைவரும் சுகாதார நடைமுறைகளை உரியவாறு பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந் திய பிரதான முகாமையாளர் செல்லத் துரை குலபாலச்செல்வன் கேட்டுள்ளார்.

இதேவேளை, தனியார் பஸ் சேவை களும் வடக்கு மாகாணத்தின் 5 மாவட் டங்களுக்கு இடையேயும் நாளை முதல் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

## வவுனியாவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டி ஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 41 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத்தனிமைப்படுத் துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நட வடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று கார ணமாக வவுனியாவில் நேற்று மூவர் மரணமடைந்துள்ளனர். ஆச்சிபுரம் பகுதியைச்சேர்ந்த 81வயதுடைய பெண் ஒருவரும், தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த66வயதுடையஆண்ஒருவரும், புதிய சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவரும் இவ்வாறு மரணமடைந்தவர்களாவர்.

சடலங்களைச் சுகாதார நடைமுறை களைப்பின்பற்றிதகனம்செய்வதற்குரிய நடவடிக்கைகளைச் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி மாகாணங்களுக்கிடை யிலான பயணக் கட்டுப்பாட்டைத் தளர்த் தாது தொடர்வதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தள பதி மேலும் கூறியுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண்
உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு -
076 740 3814



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000
இணையம் - onlinekathir.com

## மீண்டும் லஸந்த விவகாரம்

**சர்வதேச ரீதியில் பல்வேறு நெருக்குவாரங்களை எதிர்கொண்டு வரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மற்றொரு சர்வதேச அழுத்த நெருக்கடி இப்போது புதிதாக முளைத்துள்ளது.**

**2005 முதல் 2015 வரையான மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ. அவரே விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னின்று நடத்தியவர்.**

**அந்தக் காலகட்டத்தில் இலங்கை படைகளால் இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் பல்வேறு மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் அராஜகங்களுக்கு பதில் கூறவேண்டிய பிரதான சூத்திரதாரி அவர்தான்.**

**அப்படி அந்த வேளையில் அரங்கேற்றப்பட்ட ஒரு கொடூரத்தில் கொல்லப்பட்ட ஒருவரின் ஆன்மாதான் இப்போது மீள விவகாரமாக எழுந்து வந்துள்ளது எனலாம்.**

**கோட்டாபயவின் வழிகாட்டலில் யுத்தம் முன்னெடுக்கப்பட்ட போது, நாடு இரும்புத்திரைக்குள் மூடப்பட்டு, அந்த உருமறைப்பில் பல அராஜகங்கள் அரங்கேறின. அதற்குக் காரணமான அரூபக் கரங்களைப் பின்புலத்தில் இருந்து இயக்கியவர்கள் யாரென்று தெரிந்த போதும் அவர்கள் யாரும் சட்டத்தின் முன் கொண்டு வரப்படவில்லை.**

**அப்படி அரங்கேறிய அராஜகங்களில் அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பு தமிழ் ஊடகத்துறைதான். ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டனர். பலர் தாக்கிக் காயப்படுத்தப்பட்டு கொடூரமாக இம்சிக்கப்பட்டனர். அடக்குமுறைக்கு அஞ்சி பலர் நாட்டை விட்டுத் தப்பி ஓட்டம் பிடித்தனர். ஊடகங்களும் தாக்கப்பட்டன. ஊடகங்களுக்கு எதிரான அராஜகம், தேசிய பாதுகாப்பு என்ற உருமறைப்புக் கவசத்தில் பெரும் அட்டகாசமாக கட்டவிழ்ந்தது.**

**ஊடகவியலாளர்களுக்கு எதிரான அந்த அராஜகங்களுக்கும், அத்துமீறல்களுக்கும், அடாவடித்தனங்களுக்கும் காரணமான யாரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.**

**அப்படிக் கொடூரமாகக் கொல்லப்பட்டவர்களில் ஒருவர்தான் சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க. அவருடைய படுகொலை விவகாரம் மீண்டும் சர்வதேசரீதியில் பெரும் கவனிப்புக்கு உள்ளாகி இருக்கின்றது.**

**சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் இருப்பது நெதர்லாந்தின் ஹேக் நகரில். அங்கு மக்கள் நீதிமன்றம் என்ற ஓர் கட்டமைப்பு நிறுவப்பட்டுள்ளது. ரோமில் நிரந்தரமாக இயங்கும் மக்கள் நீதிமன்றத்தின் ஒரு பகுதிதான் இப்போது ஹேக் நகரில் செயற்படத் தொடங்கியுள்ளது. இங்கு பத்திரிகை ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலையையொட்டி, அதில் இலங்கை அரசு நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரிவித்து, மக்கள் நீதிமன்றத்தில் நாளை மறுதினம் வழக்குத் தொடரப்பட இருப்பதாக சர்வதேச ரீதியில் முக்கியமான ஊடக அமைப்புகள் தெரிவித்துள்ளன. இதேபோல வேறு இரண்டு முக்கிய பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் மெக்சிகோ மற்றும் சிரியா நாட்டு அரசுகளுக்கு எதிராகவும் வழக்குகள் தொடுக்கப்படுகின்றன.**

**நாளை மறுதினம் இந்த வழக்குகளின் பூர்வாங்க விசாரணைகள் ஆரம்பமானாலும் அடுத்த ஜனவரியில் தான் லஸந்த விக்கிரமதுங்க வழக்கு முழு அளவில் தொடர்ந்து விசாரணை செய்யப்படும் என்று கூறப்படுகிறது.**

**இந்த நீதிமன்றம் சாட்சியங்களைப் பரிசீலனை செய்து ஆவணங்கள், நிபுணத்துவ சாட்சியங்களைத் தொகுத்து, உரிய குறுக்கு விசாரணைகளை நடத்தி, இறுதியில் தீர்ப்பை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**உலகில் முக்கிய ஊடக அமைப்புகள் இதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்த விசாரணையில் பல உண்மை விவகாரங்கள் அம்பலமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

# அரசியல் வெற்றிக்காகவே சாணக்கியன் தமிழ் தேசிய ஆடையை அணிந்துள்ளார்

## பிள்ளையான் சாட்டை



சிலர் தோற்றுப் போன பின்னர் அரசியல் வெற்றிக்காகவே தமிழ்த் தேசியம் என்கின்றஆடையைஅணிந்துள்ளார்கள். இன்று அதைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இளைஞர்களை உசுப்பேற்றுகின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமாகிய சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஆணைகட்டியவெளி சின்னவத்தை 02 கிலோமீற்றர் வீதி கொங்கிறீற்று வீதியாகப் புனரமைப்பு செய்து மக்கள் பாவனைக்காகக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நானும் போராட்ட காலத்தில் இருந்து அவதானித்திருக்கின்றேன். எல்லா பத்திரிகைகளிலும் வெளிநாட்டு பிரதிநிதிகளின் வருகையை பெரிய எழுத்துகளில் தான் எழுதுவார்கள். அவ்வாறான செய்திகள் வந்து மக்களை ஈர்ப்புச் செய்திருக்கின்றனவே ஒளிய நடைமுறைகளிலே எதுவும் நடைபெறவில்லை என்பதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். எமது மக்களை மெல்ல மெல்ல யதார்த்தத் திற்குக் கொண்டு வருகின்றோம்.

என்னுடைய அரசியல் வாழ்க்கையும் சாணக்கியனின் வயதும் ஒன்றாக இருக்கும். அவரது பாண்டித்தியம் சிறப்பானது. ஆனால், அவர் எங்களுடைய பாதையில் வந்து என்னைப் போன்று அரசாங்கத்துடன் இணைந்து மக்களுடன் சேவையாற்ற முற்பட்டு தோற்றுப் போனார்.

தோற்றுப் போன பின்னர் அரசியல் வெற்றிக்காகவே தமிழ்த் தேசியம் என்கின்ற ஆடையை அணிந்தார். இன்று அதைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இளைஞர்களை உசுப்பேற்றுகின்றார். எவ்வாறு தேசிய உணர்வு மாறி மாறி வர முடியும்.

இவ்வாறான பேச்சுக்கள் எதையாவது பெற்றுத் தந்தால் நியாயமாக இருக்கும். ஆனாலும் எதிர்க்கட்சி அரசியலும் தேவைதான் சில நியாயமான விடயங்களும் பேசுகின்றார்கள். ஆனால் மக்களைக் குழப்புகின்ற, சிங்கள மக்களோடு குரோதமான மனநிலையை உண்டுபண்ணுகின்ற விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. பிழையான விடயங்களை எதிர்த்துக் கொண்டு அரசின் பங்காளியாக எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பது தான் காலத்தின் தேவை. இது நாங்கள் கற்றிந்த பாடம். இந்த அரசியல் கற்றுத்தந்த கசப்பான உண்மையும் இதுவே.

யார்மீதும் தனிப்பட்ட விமர்சனத்தைச் செய்வதில் எவ்விதப் பயனும் இல்லை. இவர்கள் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி என்கின்ற விடயத்தைக் கொண்டு வந்து ஓர் அரசியல் எழுச்சியை அல்லது இளைஞர்களைத் திருப்பப் பார்த்தார்கள். ஆனால் அதில் தோற்றுவிட்டார்கள். உணர்வை வைத்து மாத்திரம் அனைத்து விடயங்களையும் நோக்காமல் எங்களுடைய எதிர்கால சந்ததியை உறுதியான தளத்தில் கொண்டு செல்வதற்காக நாங்கள் பாடுபட வேண்டும்.

கிழக்கு மாகாணம் என்பது தமிழர்களின் மாகாணமாக இருந்தாலும், நீண்ட காலப் போராட்டத்தால் பொருளாதார உற்பத்தில் நலிவுற்று பின்தங்கி இருப்பதன் காரணமாகப் பல சவால்களை எதிர்கொண்டிருக்கின்றோம். இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கு இன்னும் இன்னும் வீழ்ச்சிப் போக்கான அரசியத் தீர்மானங்களை எடுக்காமல் தந்திரோபாயமான அரசியற் சித்தாந்தத்தை நாங்கள் உருவாக்க வேண்டும் – என்று தெரிவித்தார்.

# மூன்று வாகனங்கள் ஹற்றனில் விபத்து

## 6 பேர் காயம்

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா – ஹற்றன் பிரதான வீதியில் ரதல்ல குறுக்கு வீதியில் நேற்று (வியாழக்கிழமை) காலை ஏற்பட்ட விபத்தொன்றில் 6 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பகுதியிலிருந்து தலவாக்கலை பகுதிக்குச் சென்று கொண்டிருந்த வான் ஒன்று தலவாக்கலை பகுதியிலிருந்து நுவரெலியா பகுதியை நோக்கிச் சென்ற வான் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி அருகில் இருந்த மண்மேட்டுடன் மோதி வீதியில் பயணித்த ஓட்டோவுடன் மோதி குடைசாய்ந்துள்ளது. குறித்த ஓட்டோ தலவாக்கலை பகுதியிலிருந்து நுவரெலியா பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்தது.

இந்த விபத்தில் குடைசாய்ந்த வானில் பயணித்த நால்வரும், ஓட்டோவில் பயணித்த இருவரும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

நுவரெலியா பகுதியிலிருந்து தலவாக்கலை பகுதிக்குச் சென்று கொண்டிருந்த வானில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே இந்த விபத்துக்கான காரணம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஆப்கானிஸ்தானில் 2,500 வீரர்களை வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டது



ஆப்கானிஸ்தானில் அமெரிக்கத் துருப்புகளைத் தொடர்ந்து வைத்திருக்குமாறு ஜனாதிபதி ஜோ பைடனுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாக அமெரிக்க உயர் இராணுவத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் ஆப்கானிஸ்தானின் காபூல் விமான நிலையத்தில் இருந்து மக்களை அவசரமாக வெளியேற்றியமை குறித்து நடத்தப்பட்டுள்ள விசாரணையிலேயே அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் சுமார் 6 மணிநேரம் நடத்தப்பட்ட விசாரணையில் 2,500 வீரர்களை ஆப்கானிஸ்தானில் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டது என ஜெனரல் மார்க் மில்லி, ஜெனரல் ப்ரான்க் மெக்கன்ஸி ஆகிய இருவரும் கூறினர்.

ஆனால் அவ்வாறு ஆலோசனை பெற்றேன் எனத் தமக்கு நினைவு இல்லை என ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டார். மேலும் அவருக்கு மாறுபட்ட ஆலோசனை வழங்கப்பட்டதாக வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

திரும்பப் பெறும் நடவடிக்கையின் போது தற்கொலைத் தாக்குதலில் 182 பேர் கொல்லப்பட்டனர். ஓகஸ்ட் 26 அன்று 13 அமெரிக்க பணியாளர்கள் மற்றும் 169 ஆப்கானியர்கள் விமான நிலைய வாயிலால் கொல்லப்பட்டனர்.

## ஆஸ்திரேலியா நாட்டில் தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு கட்டுப்பாடுகள்!



ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில்முடக்கநிலைமுடிவுக்குவரும்போது தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாத நடுப்பகுதியிலிருந்து சிட்னியில் கொரோனா கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இருப்பினும் தடுப்பூசி போட்டுக்கொள்ளாதோர் சமூக ஒன்றுகூடல்கள் சிலவற்றில் கலந்துகொள்ள முடியாது என நியூ சவுத் வேல்ஸ் மாநில முதலமைச்சர் தெரிவித்தார்.

மேலும் தடுப்பூசி செலுத்தாதவர்கள் டிசெம்பரிலிருந்து கடைகள், உணவகங்கள், பொழுதுபோக்கு இடங்கள் போன்றவற்றில் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.



## ஆப்கானில் ஆளில்லா வேவு வானூர்தி அமெரிக்காவை எச்சரிக்கும் தலிபான்கள்!

ஆப்கானிஸ்தான் வான்வெளியில் ட்ரோன்களை பறப்பதை அமெரிக்கா நிறுத்தவில்லை என்றால் விளைவுகள் ஏற்படும் என்று தலிபான் எச்சரித்துள்ளது.

தலிபானின் டுவிட்டர் கணக்கில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில், அனைத்து சர்வதேச உரிமைகள் மற்றும் சட்டங்கள் மற்றும் கட்டாரின் டோஹாவில் தலிபானுக்கு அளித்த உறுதிமொழிகளை அமெரிக்கா மீறியுள்ளது, இந்த ட்ரோன்கள் ஆப்கானிஸ்தானில் செயல்படுகிறது என்று கூறியுள்ளது.

எந்தவிதமான எதிர்மறையான விளைவுகளையும் தடுப்பதற்காக சர்வதேச உரிமைகள், சட்டங்கள் மற்றும் உறுதிப்பாடுகளின் வெளிச்சத்தில் ஆப்கானிஸ்தானை நடத்த அனைத்து நாடுகளையும், குறிப்பாக அமெரிக்காவையும் நாங்கள் அழைக்கிறோம், என்று தலிபான் தெரிவித்துள்ளனர்.

வொஷிங்டன் மற்றும் தலிபான்களுக்கிடையேயான பலவீனமான உறவுக்கான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த கோரிக்கைக்கு அமெரிக்க அதிகாரிகள் உடனடியாக பதிலளிக்கவில்லை.



## பிரித்தானியாவில் பெற்றோல், டீசல் விநியோகத்தில் தடை ஏற்பட்டுள்ளது

பிரித்தானியாவில் பெற்றோல், டீசல் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் அந்நாட்டு இராணுவம் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் ஏற்றிச்செல்லும் கனரக வாகன சாரதிகள் போதுமான எண்ணிக்கையில் இல்லாததால், எரிபொருள் விநியோகத்தில் தடை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவசர அவசரமாக பெற்றோலை வாங்க பொதுமக்கள் முயற்சி செய்கின்றமை காரணமாக பெற்றோல் நிலையங்களுக்கு வெளியே வாகனங்கள்நீண்டவரிசையில்காத்திருக்கின்றன.

அதை அடுத்து, இராணுவ கனரக வாகன சாரதிகள் ஆயத்த நிலை யில் இருக்கின்றன எனவும் தேவைப்பட்டால் எரிபொருள் விநியோகத்தைச் சீர் செய்ய அவர்கள் பணியமர்த்தப்படுவர் என்றும் கூறப்பட்டது.

மேலும், வெளிநாட்டு சாரதிகளுக்குக் குறுகிய காலத்திற்கு விசா தள்ளுபடி செய்யப்படும் என்றும் பிரித்தானியா அரசாங்கம் தெரிவித்தது.

இதற்கிடையில், Shell, BP, Esso ஆகிய எரிபொருள் நிறுவனங்கள், பிரிட்டனில் போதுமான அளவு பெற்றோல்,டீசல்உள்ளதாகதெரிவித்துள்ளன.

## ஜப்பானின் புதிய பிரதமராகிறார் ஃபுமியோ கிஷிடா

ஜப்பானின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஃபுமியோ கிஷிடா ஆளும் லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் (எல்.டி.பி.) தலைமைக்கான தேர்தலில் வெற்றி பெற்று நாட்டின் அடுத்த பிரதமராக உள்ளார்.

2020 செப்டெம்பரில் பதவியேற்று ஒரு வருடம் மட்டுமே பணியாற்றிய பின்னர் பதவி விலகும் கட்சித் தலைவர் பிரதமர் யோஷிஹிட் சுகாவை கிஷிடா இந்த வெற்றியின் மூலம் மாற்றுவார்.

முன்னதாக பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர் பதவிகளை வகித்த பிரபல தடுப்பூசி அமைச்சரான டாரோ கோனோவை தோற்கடிக்க கிஷிடா புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் 257 வாக்குகளை பெற்றார்.

புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான நாடாளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் 4 ஆம் திகதி நடைபெற உள்ளது.

2020 ஆம் ஆண்டு தேர்தலில் சுகாவிடம் தோல்வியடைந்த கிஷிடாவுக்கு புதன்கிழமை இரண்டாவது முறையாக அதிர்ஷ்டம் அளித்துள்ளது



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்திய சர்வதேச விமான சேவைக்கு ஒக்ரோபர் 31 வரை தடை நீடிக்கப்பட்டது



கொரோனாப் பரவலைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி இந்தியாவின் சர்வதேச விமான சேவை நிறுத்தி வைக்கப்பட்டது. இருதரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில், 28 நாடுகளுக்கு மட்டும் சிறப்பு விமானங்கள் இயக்கப்பட்டுவந்தன.

சர்வதேச விமான சேவைக்கான தடை அவ்வப்போது நீடிக்கப்பட்டு வருகிறது. இறுதியா விதிக்கப்பட்ட தடைக்காலம் இன்றுடன் முடிவடைய இருந்த நிலையில், அது ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரை தடை நீடிக்கப்படுவதாக இந்திய சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் நேற்று அறிவித்தது. இருப்பினும், தேவை அடிப்படையில் சில குறிப்பிட்ட வழித்தடங்களில் சர்வதேச விமானங்கள் இயக்கப்படலாம் என்றும், சரக்கு போக்குவரத்துக்கு இந்தத்தடை பொருந்தாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## காங்கிரஸ் கட்சிக்கு உரிய தலைமை இல்லை கட்சியின் மூத்த தலைவர் கபில் சிபல் விமர்சனம்

இந்தியா முழுவதும் கடந்த தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வியை சந்தித்தை அடுத்து, கட்சியில் சீர்திருத்தம் கொண்டு வர வேண்டும் எனக் கோரி காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு கட்சியின் முக்கியஸ்தர்களான கபில் சிபல், குலாம் நபி ஆசாத் உள்ளிட்ட 23 மூத்த தலைவர்கள் கடிதம் எழுதியிருந்தனர். கட்சியின் செயல்பாடுகளிலும் அதிருப்தியில் இருந்த அவர்களை சமாதானப் படுத்த கட்சித் தரப்பில் இதுவரை எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.

இந்தநிலையில், நீண்ட இடைவேளைக்குப் பின் இந்த விவகாரம் குறித்து மூத்த காங்கிரஸ் தலைவர் கபில் சிபல் மீண்டும் மனம் திறந்துள்ளார். அதிருப்தி காரணமாக கட்சியில் இருந்து விலகி வேறு கட்சிக்கு மாறுவோர் நாங்கள் அல்ல என்றும், கட்சித் தலைமையுடன்



நெருக்கமாக இருந்தவர்களே அவர்களை விட்டு விலகிச் சென்றிருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தாங்கள் எப்போதும் கட்சியை விட்டு விலகிச் செல்ல மாட்டோம் எனக் கூறிய அவர், காங்கிரஸ் திட்டமிடல் குழுவைக் கூட்டும்படி மூத்த தலைவர் ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார் எனவும், அது கூடினால் தான் நாங்கள் ஏன் இப்படி அதிருப்தி மனநிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.





## மேற்கு வங்கத்தில் மம்தா போட்டியிடும் பவானிபூர் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெற்றது

மேற்கு வங்க மாநிலத்தில் கடந்த மே மாதம் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் நந்திகிராம் தொகுதியில் போட்டியிட்ட மம்தா பானர்ஜி, பா. ஜனதா வேட்பாளர் சுவேந்து அதிகாரியிடம் தோல்வியடைந்தார். ஆனால், அந்தத் தோல்வியை ஏற்காத மம்தா பானர்ஜி, நீதிமன்றத்தில் சுவேந்து அதிகாரி வெற்றியை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார்.

இந்தச் சூழலில் மம்தா பானர்ஜி முதலமைச்சராக பதவி ஏற்று 6 மாதத்துக்குள் எம்.எல்.ஏயாக பதவியேற்கவேண்டும் இல்லாவிட்டால் முதலமைச்சர் பதவியிலிருந்து இறங்க வேண்டிய நிலை உள்ளது. இதனால், மம்தா பானர்ஜி தேர்தலில் போட்டியிடுவதற்கு வசதியாக பவானிபூர் எம்.எல்.ஏயும்,வேளாண் அமைச்சராக இருந்த சுபன்தீப் சந்தோபத்யாயே தனது பதவியை ராஜினாமாச் செய்தார். இதையடுத்து, பவானிபூர் இடைத் தேர்தலில் மம்தா பானர்ஜி போட்டியிடுவது உறுதியானது. இதற்கு முன் இருமுறை பவானிபூரில் போட்டியிட்டு மம்தா பானர்ஜி வென்றுள்ளார்.

பவானிபூர் தொகுதியில் முதலமைச்சர் மம்தாவை எதிர்த்து வேட்பாளரை நிறுத்தவில்லை என்று காங்கிரஸ் கட்சி அறிவித்தது. பா.ஜனதா சார்பில் பிரியங்கா திப்ரேவால் களமிறக்கப்பட்டுள்ளார். இதன்படி பவானிபூர் தொகுதியில் இன்று இடைத்தேர்தல் நடைபெற்றுள்ளது. மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் அங்கு தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. பவானிபூர் தவிர, முர்ஷிதாபாத் மாவட்டத்தில் ம்ஷெர்கஞ்ச் மற்றும் ஜாங்கிபூர் ஆகிய இடங்களிலும் இடைத் தேர்தல் நடைபெற்றது. இந்த இடைத்தேர்தல்களுக்கான வாக்கு எண்ணிக்கை ஒக்ரோபர் மூன்றாம் திகதி நடக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, மம்தா பானர்ஜி போட்டியிடும் பவானிபூர் இடைத்தேர்தலில் பெருமளவு முறைகேடுகள் நடைபெறுவதால் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று கொல்கத்தா உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த கொல்கத்தா உயர் நீதிமன்றம் அந்த மனுவைத் தள்ளுபடி செய்ததுடன் திட்டமிட்டபடி இன்று தேர்தல் நடைபெறுவதையும் உறுதிப்படுத்தியிருந்தது.




## 'உலகின் சிறந்த நம்பிக்கை' என பரவும் மோடியின் படம் போலியானது என த நியூயோர்க் டைம்ஸ் உறுதிப்படுத்தியது

இந்தியப் பிரதமர் மோடியின் படத்துடன், 'உலகத்தின் சிறந்த இறுதி நம்பிக்கை' என்ற தலைப்பில் 'த நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையில் செய்தி வெளியானதாக பரவும் படம் போலியானது என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக சமூக வலைதளங்களில் படம் ஒன்று பரவி வருகிறது. செப்டெம்பர் 26 என திகதி குறிப்பிடப்பட்ட அந்த 'த நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகையில் இந்தியப் பிரதமர் மோடியின் படம் இடம்பெற்றிருக்கிறது. அதற்கு மேல் உள்ள தலைப்பில் 'உலகின் சிறந்த இறுதி நம்பிக்கை' என குறிப்பிடப்பட்டுள்ளது. தலைப்புக்கு கீழே, 'உலகின் மிகவும் பிரியமான மற்றும் சக்திவாய்ந்த தலைவர் நம்மை ஆசீர்வதிக்க இருக்கிறார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை தாங்கள் வெளியிடவில்லை என்று கூறி 'த நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை' மறுத்துள்ளது.

இது முற்றிலும் புனையப்பட்டது" எனவும் அந்தநிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக நியூயோர்க் டைம்ஸின் டுவிட்டர் பக்கத்தில், இது முற்றிலும் புனையப்பட்ட படம். உண்மையான நம்பகத்தனமான செய்திகள் தேவைப்படும் சூழலில், போட்டோஷாப் செய்யப்பட்ட படங்களை இணையத்தில் மறுபகிர்வு செய்வது அல்லது பரப்புவது நிச்சயமற்ற தன்மையை மட்டுமே உருவாக்கும்" என்று பதிவிடப்பட்டுள்ளது.

கொரோனா இரண்டாவது அலையைச் சரியாகக் கையாளத் தவறியதாக பா.ஜ.க அரசைக் குறித்து த நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டது குறித்து பிரதமர் மோடியின் ஆதரவாளர்கள் அந்தப் பத்திரிகையை விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ விடுதலை இயக்கம் தொடர்பாக சிறுபிள்ளைத் தனமாகக் கருத்திடக் கூடாது



தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு நெடிய நீண்ட வரலாறு இருக்கின்றது. இந்த விடயங்கள் தெரியாமல் தமிழ்த் தேசியத்தின் குழந்தைப் பிள்ளைகள் கருத்துக்கள் கூறுவது சிறுபிள்ளைத் தனமானது என நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தொடர்பில் அண்மைக் காலங்களில் வெளிவந்த கருத்துக்கள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்த அமைப்பு முதலாவதாகச் சந்தித்த கட்சி தமிழீழ விடுதலை இயக்கம் தான். அதனைத் தொடர்ந்து தான் ஏனைய கட்சிகளை அந்த அமைப்பு சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு ஒரு பெரிய நீண்ட வரலாறு இருக்கின்றது. தமிழீழ விடுதலை இயக்கம்தான் ஆயுதப்போராட்ட இயக்கங்களிலே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இயக்கம். இதில் சில காலம் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கூட இருந்தார் என வரலாறுகள் உண்டு.

தமிழீழ விடுதலை இயக்கம் தான் ஒரு பாதுகாப்புப் படையினரின் அரணை முற்றுமுழுதாக அழிப்பு நடவடிக்கையினை மேற்கொண்டு அதனைக் காணொலியாகப் படைத்தது. 1984ஆம் ஆண்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை முற்றுமுழுதாக நிர்மூலமாக்கிய வரலாறு ரெலோவுக்கே உண்டு.

ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்குள் பல முரண்பாடுகள் ஏற்பட்டமை வெளிப்படையான உண்மை. 2001இலே கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்து நாங்கள் எல்லோரும் ஒன்றாகினோம். இன்னுமொரு உண்மையும் இருக்கின்றது, ஆயுதப் போராட்ட இயக்கங்களாக இருந்து அரசியல் கட்சிகளாக போராட்ட இயக்கங்கள் பதிவு செய்யப்பட்டதன் பின்பு 1989ஆம்ஆண்டில் இருந்து இன்றுவரைக்கும் தொடர்ச்சியாக நடைபெற்ற ஒவ்வொரு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் தமிழீழ விடுதலை இயக்கம் மாத்திரம் தான் நாடாளுமன்ற உறுப்புரிமையை வகித்திருந்தது.

ஆனால் வரலாறு தெரியாத சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசியத்தின் குழந்தைப் பிள்ளைகள், 2009 ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசியத்துக்குள் வந்தவர்கள் கூறுகின்றார்கள் தமிழீழ விடுதலை இயக்கமும் ரெலோவும் ஒரு கட்சி என்று மக்களுக்குக் காண்பிப்பதற்காக ஜெனிவாவுக்கு அனுப்பிய கடிதத்தில் கையொப்பம் வைத்துள்ளது என்று.

தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு நெடிய நீண்ட வரலாறு இருக்கின்றது. எமது கட்சியின் 50வது ஆண்டு பூர்த்தியை நாங்கள் 2019ஆம் ஆண்டு கொண்டாடியுள்ளோம். 52ஆவது ஆண்டிலே தமிழீழ விடுதலை இயக்கம் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இந்த விடயங்கள் தெரியாமல் கருத்துக்கள் கூறுவது சிறுபிள்ளைத்தனமானது.

கட்சியிலே தேசியத்துடன் நீண்டகாலம் இருக்க வேண்டும், வளர வேண்டும், பக்குவம் அடைய வேண்டும், அதற்குப் பின்பு இந்த வரலாறுகளைச் சரியாகப் படிக்க வேண்டும். எம்மைப் பொறுத்தமட்டில் சுமார் 39 வருடங்களாக போராட்டம், அரசியல் தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்ற வரலாற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு கடந்த கால வரலாற்றினை யாரும் சொல்லித் தரத் தேவையில்லை. ஆனால் சிலருக்கு இந்த வரலாறுகளை யாராவது சொல்லிக் கொடுக்க வேண்டும் அல்லது ஏதாவது புத்தகத்தில் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த வரலாறுகளைப் பற்றி அறிய வேண்டுமாக இருந்தால் அவற்றைச் சரியானவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.




# ஊறணி நகர அபிவிருத்தி வேலைத்திட்டம் ஆரம்பம்

செழிப்பான நகரங்கள் 100 அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகரின் ஊறணிச்சந்தி தொடக்கம் திருப்பெருந்துறை வரையான நடைபாதை, சிறுவர் பூங்கா, ஓய்வெடுக்கும் இடங்கள் தொடர்பான அபிவிருத்தித்திட்டம் நகர அபிவிருத்தி இராஜங்கா அமைச்சினால் சுமார் 1.8 கோடி ரூபா செலவில் மாவட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையில் ஊறணி நகர அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஊறணி நாற்சந்தியினை அழகுபடுத்தும் வேலைத் திட்ட நிகழ்வு நேற்றுக்காலை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இடம்பெற்ற இவ் நிகழ்வில் கிழக்கு மாகாண நகரஅபிவிருத்திதிட்ட பணிப்பாளர் ஜெ. லீயனகே, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.வாசுதேவன் மற்றும் மட்டுமா நகரசபை ஆணையாளர் எஸ்.தாயாபரன், மண்முனை வடக்கு பிரதேச செயலக உயர் அதிகாரிகள், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வவுணதீவு பிரதேச சிறுபோக பயிர்ச்செய்கைக்கான கூட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு- வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் ஆயித்தியமலை, மற்றும் மண்டபத்தடி கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட விவசாய நிலங்களில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான ஆரம்பக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிஸ்காந் தலைமையில் நேற்று மண்முனை மேற்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது இப்பிரதேசத்தில் மானாவரி செய்கை ஆற்றுப்பாச்சல், உன்னிச்சை திட்டம் போன்ற நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக மேற்கொள்ளவிருக்கும் சிறுபோக நெல் மற்றும் தானிய பயிர்ச்செய்கை எடுக்கப்பட்டது இதில், விதைப்பு ஆரம்பம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை எனவும் தீர்மானிக்கப்பட்டது

மேலும் இம்முறை சேதனப் பசளையினை விவசாய நிலங்களுக்கு பயன்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்

மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் எஸ். சுதாகரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், விவசாயத்திணைக்கள துறைசார் தலைவர்கள், வவுணதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி, கமநல



பண்ணப்படுவதற்கான முன் ஆயத்தங்கள், நீர்ப்பாசனம் மற்றும் பசளை விநியோகம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதன்போது பல விடயங்கள் கூட்டத் தீர்மானமாகவும் சேவைகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# வாகரையில் யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழப்பு

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளாமைச்சேனை பிரதேசத்தில் நேற்று அதிகாலை யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பெரும்போக வேளாண்மை செய்கைக்கு தனது வயலை தயார்ப்படுத்தும் நிலையில் வயலில் தங்கி வேலை செய்து வந்த நிலையில் நேற்று அதிகாலை வயல் பிரதேசத்திற்கு வந்த யானை குறித்த நபர் தங்கியிருந்த வாடியை சேதப்படுத்தியதுடன் விவசாயியையும் தாக்கியதில் குறித்த விவசாயி உயிரிழந்துள்ளார்.

யானை தாக்கியதில் உயிரிழந்தவர் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மீராவோடை பாடசாலை வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான அலியார் முகம்மது காசிம் (வயது 54) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த மரணம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# ராஜஸ்தான் அணிக்கு எதிராக பெங்களூருக்கு இலகு வெற்றி



ஐ.பி.எல். தொடரின் 43 ஆவது லீக் போட்டியில், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் 14 புள்ளிகளுடன் பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ள பெங்களூர் அணி, பிளே ஓஃப் சுற்றுக்கான வாய்ப்பினை பிரகாசப்படுத்தியுள்ளது.

டுபாயில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் மோதியிருந்தன. இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. எவின் லூயிஸ் 58 ஓட்டங்களையும் ஜெய்ஸ்வால் 31 ஓட்டங்களையும் எடுத்தனர். பெங்களூர் அணியின் ஹர்சல் பட்டேல் 3 விக்கெட்டுக்களையும் சஹால் மற்றும் பாஸ் அஹமட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து களமிறங்கிய ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, 17.1 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. க்ளென் மக்ஸ்வெல் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் ஸ்ரீகர் பராத் 44 ஓட்டங்களையும் பெற்றனர். ராஜஸ்தான் அணியின் முஷ்டபிசுர் ரஹ்மான் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்தப்போட்டியின் நாயகனாக பெங்களூர் அணியின் யுஸ்வேந்திர சஹால் தெரிவுசெய்யப்பட்டார்.

தற்போதைய புள்ளிப்பட்டியலின்படி சென்னை அணியும் டெல்லியும் தலா 16 புள்ளிகளுடன் முறையே முதல் மற்றும் இரண்டாமிடங்களிலும், ராஜஸ்தான் அணி 14 புள்ளிகளுடன் 3 ஆவது, கொல்கத்தா 10 புள்ளிகளுடன் 4 ஆவது இடங்களிலுமுள்ளன.

## 19 வயதுக்குட்பட்டோருக்கான தொடருக்காக இலங்கை வருகிறது பங்களாதேஷ் அணி



இலங்கை19வயதுக்குட்பட்டோருக்கான தேசிய கிரிக்கெட் அணியுடனான இளையோர் ஒருநாள் தொடருக்காக பங்களாதேஷ் 19 வயதுக்குட்பட்டோருக்கான அணி அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இளையோர் ஒருநாள் தொடருக்கான போட்டி அட்டவணையையும் இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. பங்களாதேஷ் 19 வயதுக்குட்பட்டோர் அணி அடுத்த மாதம் 7 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதுடன் போட்டிகள் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.


## பி.எஸ்.ஜி. கழக அணிக்காக முதல் கோலை அடித்தார் மெஸ்ஸி

கால்பந்தாட்ட உலகின் நட்சத்திர ஆட்டக்காரரான லியோனல் மெஸ்ஸி, பி.எஸ்.ஜி. கழக அணிக்காக தனது முதல் கோலைப் பதிவு செய்துள்ளார்.

முன்னதாக பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்த மெஸ்ஸி, தற்போது இரண்டு ஆண்டுகளுக்கு பி.எஸ்.ஜி. அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அந்த அணிக்காக 30 ஆம் எண் கொண்ட சீருடையில் அவர் விளையாடி வருகிறார். பி.எஸ்.ஜி. அணிக்காக நான்கு ஆட்டங்களில் விளையாடிய மெஸ்ஸி அந்த அணிக்கான தனது முதல் கோலை மன்செஸ்டர் சிட்டிக்கு எதிராக பதிவு செய்துள்ளார். இந்தப் போட்டியில் பி.எஸ்.ஜி. அணி 2 - 0 என மன்செஸ்டர் சிட்டி அணியை வீழ்த்தி இருந்தது. 2018 க்குப் பின்னர் முதல் முறையாக லீக் சுற்றின் குழுப்பிரிவு ஆட்டத்தில் மன்செஸ்டர் சிட்டி அணி தோல்வியைத்தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.









ரொனால்டோ கடைசி நிமிடத்தில் கோல்

## வில்லாரியலை வென்றது மன்செஸ்டர் யுனைடெட்

சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டத் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் மன்செஸ்டர் யுனைடெட் அணியும் வில்லாரியல் அணியும் மோதின. போட்டி தொடங்கிய நேரம் முதலே இரு அணிகளும் முழு ஆற்றலோடு விளையாடின.

இதனால் முதல் பாதியில் இரு அணிகளாலும் கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் வில்லாரியல் அணியின் பாக்கோ அல்காஸர் 53 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க, அந்த அணி 1-0 என முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக 60 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைடெட் அணியின் அலெக்ஸ் டெல்லஸ் ஒரு கோலை அடிக்க, இரு அணிகளும் 1-1 என சம நிலைக்கு வந்தன.

90 நிமிடங்கள் முடிந்த பின்னர், உபரியாக செலவிடப்பட்ட நேரத்தை ஈடுசெய்வதற்காக கூடுதலாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டவேளையில், இறுதிநிமிடத்தில்கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒரு கோலை அடித்தார். இதனால் 2-1 என்ற கோல் கணக்கில் வில்லாரியல் அணியை வீழ்த்தி மன்செஸ்டர் யுனைடெட் அணி வெற்றிபெற்றது.



# முறையான முகாமைத்துவம் இல்லாவிட்டால் கொவிட்டால் பேராபத்து ஏற்படும் நிலைமை

நாட்டில் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் காணப்பட்ட கொரோனா அச்சுறுத்தல் நிலைமை தற்போது குறைவடைந்திருந்தாலும், தற்போதைய நிலைமையை முறையாக முகாமைத்துவம் செய்யாவிட்டால் கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் காணப்பட்டதை விட அதிக அபாய நிலைமை ஏற்படக் கூடும் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் பதில் பணிப்பாளர் விசேட வைத்தியர் சமித்த கினிகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று(புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

நாட்டிலுள்ள மொத்த சனத்தொகையில் இதுவரையில் 53 சதவீதமானோர் முழுமையாக தடுப்பூசிகளைப் பெற்று பாதுகாப்பு பெற்றுள்ளனர்.

63.6 சதவீதமானோர் முதற்கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் இது மாத்திரம் போதுமானதல்ல. மீண்டுமொரு அபாய நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது தனிநபர் உரிமை என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இதில் சமூக உரிமையும் பொறுப்பும் உள்ளடங்கியுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எந்தவொரு நாடு எந்தவொரு தடுப்பூசியையும் தடை செய்யவில்லை. மாறாக குறித்த தடுப்பூசிகளைப் பெற்று தமது நாட்டுக்கு வருபவர்களுக்கு தனிமைப்படுத்தல் காலத்தில் சில சலுகைகளை வழங்குகின்றன.

எனவே தடுப்பூசி எதுவாக இருந்தாலும் அதனைப் பெற்றுக்கொள்ளத் தயங்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம். முன்னரைப் போன்ற அபாய நிலை மீண்டும் ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்துவது இலகுவானதல்ல. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நாடாளுமன்றத்தை 5 நாள் கூட்ட முடிவு

எதிர்வரும் வாரத்தில் நாடாளுமன்றத்தை 5 நாள்களுக்கு கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சித் தலைவர்களுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை நாடாளுமன்றம் கூடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தென்மாகாணப் பாடசாலைகளை மீளவும் ஆரம்பிப்பதற்குத் திட்டம்

தென்மாகாணத்தில் உள்ள, 200 மாணவர்களுக்கும் குறைந்த பாடசாலைகளை மீள ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி முதல் தென் மாகாண பாடசாலைகளை மீள ஆரம்பிக்க மாகாண கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கான நடவடிக்கைகள், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் யாப்பா ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# மாகாணங்களுக்கிடையிலான தடை இரு வாரங்கள் நீடிப்பு?

மாகாணங்களுக்கிடையிலான பயணக்கட்டுப்பாடு இன்னும் சிறிது காலம் நீடிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மருத்துவர் அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் தற்போது அமுலிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு நாளை காலை நீக்கப்படவுள்ள நிலையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், சிகை அலங்கார நிலையங்கள், பார்கள், இரவு விடுதிகள் ஆகியன ஒரு மாதத்துக்கு பின்னரே திறக்கப்பட வேண்டும் எனவும் வைத்திய அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, மாகாணங்களுக்கிடையில் இன்னும் இரு வாரங்களுக்கு ரயில் மற்றும் பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படா எனவும், மாகாணத்துக்குள்தான் சேவைகள் இடம்பெறும் எனவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

# இறக்குமதி கட்டுப்பாடுகளை குறைப்பதற்கு நிவாரணம் வழங்க பிரதமர் அறிவுறுத்து!



அத்தியவசியமற்ற பொருள்கள் மற்றும் கருவிகளுக்கு இதுவரை விதிக்கப்பட்டுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளை முடிந்தளவிற்கு குறைக்கும் வகையில் நிவாரணம் வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (புதன்கிழமை) மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்தியவசியமற்ற பொருள்கள் மற்றும் கருவிகளுக்கு இதுவரை விதிக்கப்பட்டுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக வர்த்தகர்களும் பொதுமக்களும் எதிர்கொண்டுள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு பிரதமர் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அதற்கமைய மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இது தொடர்பில் தீர்வை முன்வைக்கவுள்ளார்.

# மூன்றாவது டோஸாக பைஸர் தடுப்பூசியை செலுத்த அனுமதி

தடுப்பூசியின் மூன்றாவது டோஸாக பைஸர் தடுப்பூசியை செலுத்துவதற்கு தடுப்பூசி தொடர்பான தொழிநுட்ப குழுவால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 60 வயதுக்கு மேற்பட்டோர், சிறுநீரக கோளாறு, புற்றுநோய் போன்ற பாரதூரமான நோய்களைக் கொண்டுள்ள 30 – 60 வயதுக்கு உட்பட்டோருக்கு இவ்வாறு தடுப்பூசியின் மூன்றாவது டோஸை செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், சுகாதார பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கும் இவ்வாறு பைஸர் தடுப்பூசியை செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் தடுப்பூசி அட்டைகளைக் காட்டி உணவகங்களுக்குள் நுழையும் நடைமுறை?



எதிர்வரும் காலங்களில் கொழும்பிலுள்ள உணவகங்களில் தடுப்பூசி அட்டைகளை காட்டி வாடிக்கையாளர்கள் உணவருந்தும் நடைமுறை கொண்டுவரப்படலாம் என கொழும்பு நகர உணவகக் குழுமத்தின் தலைவர் ஹர்போ குணரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக கொழும்பில் உள்ள உணவக உரிமையாளர்கள் பலரிடம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தடுப்பூசி அட்டையை உணவகத்தில் பணிபுரிபவர்களும் காட்டுகின்றமை, உணவகத்துக்கு ஆதரவளிக்கும் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கையை அளிக்கும் எனவும் ஹர்போ குணரத்ன கூறியுள்ளார்.

அத்துடன் வாடிக்கையாளர்கள், இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டமைக்கான அடைடையை தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்து வைத்து, அதனைக் கூட காண்பிக்க முடியுமெனவும் குணரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பெரும்பாலான உணவகங்களிலுள்ள ஊழியர்கள் தடுப்பூசி செலுத்தினோம் எனக் கூறி பேட்ஜ் அணிந்து இருப்பார்கள். அதனால், வரும் வாடிக்கையாளர்களுக்கு ஊழியர்கள் கூட தடுப்பூசி செலுத்தியுள்ளார்கள் என்பது தெரியும் என அவர் கூறியுள்ளார்.



# தேவாலயங்கள் மீதான தாக்குதல்; செய்திகளால் பீதியடைய வேண்டாம்

## பாதுகாப்பு அமைச்சு செயலர் அறிவிப்பு

சமூக ஊடகங்கள் மற்றும் மின்னணு ஊடகங்களில் இலங்கை தேவாலயங்கள் மீது தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற செய்தி அடிப்படைத் தகவலை அடிப்படையாகக் கொண்டது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு குறித்த தகவல் அந்தந்த அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்படவில்லை என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தச் சம்பவம் குறித்து பீதியடைய எந்த அவசியமும் இல்லை என்றும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

# மேலும் 40 லட்சம் பைஸர் இலங்கையை வந்தடைவு

இலங்கைக்கு மேலும் 40 லட்சம் பைஸர் தடுப்பூசி டோஸ்கள் இன்று (வியாழக்கிழமை) காலை கொண்டுவரப்பட்டுள்ளன.

குறித்த தடுப்பூசிகள், நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் விமான நிலையத்திலிருந்து ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து எமிரேட்ஸ் விமானம் ஊடாக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இவ்வாறு கொண்டுவரப்பட்டுள்ள தடுப்பூசிகளை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைக்கு கொண்டு செல்லும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என விமான நிலையத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் ஒரே தடவையில் அதிகபடியாக இறக்குமதி செய்யப்பட்ட பைஸர் தடுப்பூசிகள் அளவுகள் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.09.2021இல் வெளியிடப்பெற்றது.